# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 06.08.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

பிரிட்டன் ஜமாஅத்தே அஹ்மதிய்யா ஜல்ஸா ஸாலானா நிறைவு பெற்றது அல்ஹம்துலில்லாஹ். முதலில் நமது தலை அல்லாஹ்வின் முன்பு குனிந்துள்ளது. குனியவும் வேண்டும். முழுக்க முழுக்க அவனது அருளால் மட்டுமே இந்த வேலைகள் நிறைவு பெற்றுள்ளன. உண்மையான முஃமினின் நடைமுறை இவ்வாறு தான் இருக்கவும் வேண்டும். நாம் இந்த முக்கிய விஷயத்தை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் ஆரம்ப வசனத்திலேயே இதனைப் பற்றி கூறி விட்டான். ஒரு உண்மையான முஃமின் தமது பணிகளை இறைவனின் பெயரினாலேயே ஆரம்பிக்கின்றார். அதன் மூலமே அப்பணியின் தொடக்கம் முதல் முடிவு வரை அல்லாஹ்வின் உதவி தொடர்ந்து கிடைக்கும். இறைவனின் நினைவு ஒவ்வொரு வினாடியும் நினைவில் இருக்கும்.

திருக்குர்ஆனின் முதல் வசனம் பிஸ்மில்லாஹ்விலிருந்து ஆரம்பமாகிறது. இதில் ஒரு பிரகடனம் உள்ளது. நான் இறைவனின் பெயரால் இந்த மகத்தான நூலைப் படிக்கிறேன். எனது மார்க்கம் மற்றும் உலகம் இரண்டின் நிலைப்புத்தன்மைக்காக இதனை இறைவன் இறக்கியுள்ளான். எனவே ஒரு முஃமினுக்கு இதில் உள்ள போதனை இதுதான். ஒரு முஃமினுடைய ஒவ்வொரு பணியின் தொடக்கமும் பிஸ்மில்லாஹ்வாகும். அதாவது எல்லா பண்புகளின் தொகுப்பாகிய அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கின்றேன். அதில் இரண்டு பண்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒன்று, அர்ரஹ்மான். இன்னொன்று அர்ரஹீம். அர்ரஹ்மான் என்பவன் அளவற்ற கருணை காட்டுபவன்; மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவன் ஆவான். இது அல்லாஹ்வின் ரஹ்மானிய்யத் என்ற பண்பாகும். அந்த ரஹ்மானிய்யத் என்ற பண்புதான் அளவற்ற கருணைகாட்டியவாறு தனது சிறப்பை வழங்குகிறது. ஒரு பணியை செய்வதற்கு அப்பண்பு செய்யும் ஏற்பாட்டை எந்த மனித கருணையாலும் செய்து தர முடியாது. அல்லாஹ் தனது பெரும் பண்புகளை ரஹ்மானிய்யத்தின் காட்சியைக் காட்டியவாறு செய்கிறான். பிறகு ரஹீமிய்யத் என்ற பண்பானது பொதுவான நிலையிலிருந்து விலகி, ரஹ்மானின் அடியார்களுக்காக பிரத்யேகமான தனது ஒளியைக் காட்டுகிறது. ஒரு முஃமின் அல்லாஹ்விடமிருந்து உதவியைப் பெறுவதற்காக அவன் முன் குனிகிறார். எல்லா விஷயங்களையும் சரியாக செய்வதற்காக அவனது உதவியை, ரஹ்மத்தை எதிர்பார்க்கிறார். அந்நிலையில் அல்லாஹ் தனது உதவிகள் என்ற ஒளியைக் காட்டுகின்றான். இந்த உதவிகளின் ஒளியை இந்த ஜல்ஸாவிலும் நாம் கண்டோம். அல்லாஹ்வின் ரஹ்மானிய்யத்தின் காட்சியையும் கண்டோம். ரஹீமிய்யத்தின் காட்சியையும் கண்டோம். அதனைக் கண்டு நமக்கு நன்றி செலுத்தும் ஆவல் ஏற்பட்டது. அல்லாஹ்வின் அருளால் இந்த நன்றியுடைமை அல்லாஹ்வின் நன்றியுள்ள அடியாராக இருக்கின்ற காரணத்தால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அல்லாஹ் வழங்கிய, **நீங்கள் நன்றி செலுத்தினால் நான் இன்னும் அதிகமாக வழங்குவேன் 14:8** என்ற வாக்குறுதியில் இருந்து பயனடைய வேண்டும். ஜல்ஸாவின் நாட்களிலும் இறையருள்களைப் பார்த்து நன்றி செலுத்திக் கொண்டிருந்தோம். அவனுக்கு முன் குனிந்து இருந்தோம். இறைவன் நமது பயங்களை கவலைகளை அகற்றினான். எண்ணற்ற அருள்களுடன் ஜல்ஸா நிறைவு பெற்றது. எனவே இந்த இறை அருள்கள் அல்லாஹ்வின் ரஹ்மானிய்யத் மற்றும் ரஹீமிய்யத்தின் காட்சிகள் நம்மிடம் நிரந்தரமாக இருக்க வேண்டும். அதற்காக இறை அருள்களை நாம் தேடிக் கொண்டிருக்க வேண்டும். அதன்மீது ஈமான் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: இந்த ரஹ்மானிய்யத், ரஹீமிய்யத் என்ற இரு பண்புகளும் எத்துணை முக்கியத்துவம் வாய்ந்தவை எனில், அவை இல்லாமல் உலகியல் பணிகளோ மார்க்கப் பணிகளோ நிறைவடைய முடியாது. எனவே சிந்தித்துப் பார்த்தால் உங்களுக்கு தெரிய வரும். உலகிலுள்ள எல்லா பணிகளையும் முடிக்க இந்த இரு பண்புகளும் எப்போதும் ஒவ்வொரு நொடியும் பணியில் ஈடுபட்டுள்ளன.

இறைவனது ரஹ்மானிய்யத் மனிதன் பிறக்கும் முன்பிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே ரஹ்மானிய்யத் மனிதனுக்கு என்னென்ன விஷயங்களை தருகிறதோ அது மனிதனது ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. அதனை மனித முயற்சியால் ஒருபோதும் பெற முடியாது.

மனிதன் எல்லா வாய்ப்புகளையும் பெற்று இறைவனால் தரப்பட்ட அப்பண்புகளைக் கொண்டு அந்த அனைத்து ஆற்றல்களையும் ஒரு பணிக்காக முழுமையாக பயன்படுத்தும் போது இறைவனது ரஹீமிய்யத்திலிருந்து பயன் பெறுகிறார். பிறகு இறைவனது அந்த ரஹீமிய்யத் என்ற பண்பானது மனித முயற்சிகளை வீணாக்காமல் பாதுகாக்கிறது. பிறகு அந்த முயற்சிகளுக்கு நல்ல கனிகளை வழங்குகிறான். பிறகு ரஹீமிய்யத் என்ற பண்புதான் முழுக்க முழுக்க மனிதனுக்கும் மரணித்துப்போன உழைப்புகளுக்கும் உயிரைக் கொடுக்கிறது. எனவே ஜல்ஸாவின் பணிகளுக்கான திட்டக்குழுவின் உழைப்புகளுக்கும் கிடைத்த வெற்றிகள் மனிதனை மேன்மேலும் இறைவனின் அருள்களை நோக்கி அவனை கவனமூட்டுகிறது. இந்த எல்லா பணிகளையும் முழுமையாக செய்து விட்டு மனிதன் அனைத்தையும் தனது முயற்சி என்று கருதாமல் இறை அருள் என்று கருதும் போதுதான் இறைவனின் நன்றியுள்ள அடியாராக ஆகிறார். உண்மையான நன்றியுள்ள அடியான் ஆவதற்கு இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். இறைவனுக்கு செய்யும் நன்றியுடைமையே மனிதனை நன்றியுள்ள அடியானாக ஆக்குகிறது. நான் ஏற்கனவே கூறினேன். நீங்கள் எனக்கு நன்றி செலுத்தினால் நான் உங்களுக்கு இன்னும் அதிகமாக வழங்குவேன் என்று கூறுகிறான். அதேபோன்று இன்னும் பல்வேறு இடங்களில் இந்த நன்றியுடைமையைப் பற்றி கூறியுள்ளான். ஒரு முஃமினின் அடையாளமே நன்றியுடைமைதான். ஆனால் முஃமினல்லாதவர் நன்றியுடையவர் ஆகமாட்டார்.

ஓரிடத்தில் அல்லாஹ் தனது அருளையும் கருணையையும் பற்றி குறிப்பிட்டவாறு மனிதனுடைய நன்றிகேடு பற்றியும் பேசுகிறான்.

**நிச்சயமாக அல்லாஹ் மக்களுக்கு அருள் செய்பவனாவான். ஆனால் பெரும்பாலார் நன்றி செலுத்துவதில்லை. (2:244)**

இவ்வளவு அருள்களுக்குப் பிறகும் மனிதன் நன்றி செலுத்த வேண்டிய அளவுக்கு நன்றி செலுத்துவதில்லை. மனிதனது ஆன்மீக முன்னேற்றத்திற்கும் இதுவே மனிதனை ஆயத்தம் செய்கிறது. உலகில் வெளிப்படையான முன்னேற்றத்திற்கும் வழிவகை செய்கிறது. எனவே ஒரு முஃமின் இருவகையான அருள்களையும் இறைவனிடமிருந்து பார்க்கும் போது அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதில் முன்பை விட அதிகமாக கவனம் செலுத்துகிறார். அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்கு மிகச்சிறந்த வழி அவனால் கூறப்பட்ட வழிமுறைகளுக்கேற்ப நடந்து நமது ஒவ்வொரு செயலின் விளைவுகளையும் இறைவன் பக்கமே சுட்டிக் காட்ட வேண்டும். இதுவே உண்மையான முஃமின் என்று அழைக்கப்படுபவராவார். இவரே ஒவ்வொரு பணியையும் இறைவனின் பெயரால் செய்பவராவார். இவரே தமது ஒவ்வொரு பணியையும் நிறைவு செய்து இறைவனது ரஹ்மானிய்யத்தும் ரஹீமிய்யத்தும் ஆகும் என்று கருதுபவராவார். ஒரு முஃமினுக்கு இறைவனுக்கு ஹம்து – புகழ்வதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை என்ற எண்ணம் ஏற்படுகிறது. ஹம்து செய்வதற்கு திருக்குர்ஆன் தான் சரியான வழியைக் காட்டுகிறது.

அல்லாஹ் சூரா ஃபாத்திஹாவில் முஃமின்களுக்கு தெளிவுபடுத்துகிறான். தொழுகைகளின் ஒவ்வொரு ரக்அத்திலும், நஃபில்களிலும், துஆக்களிலும் அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் – எல்லா உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் என்று கூறுவார்கள். அந்த இறைவன் எல்லா விதமான ஆயத்தங்களையும் செய்தான். இறைவனது ரஹ்மானிய்யத், ரஹீமிய்யத் மூலம் வெளிப்படுகின்ற எல்லா அருட்களுக்காகவும் ஒரு முஃமின் ஹம்து செய்கிறான். உண்மையான ஹம்து பற்றிய உணர்வு அவரிடம் உருவாகிறது. இதனைப் பற்றி தெளிவுபடுத்திய அல்லாஹ் ஸனா – புகழ், ஸுகூர் (நன்றி) என்ற சொற்களுக்குப் பதில் ஹம்து – புகழ்ச்சி என்ற சொல்லை ஏன் பயன்படுத்தினான் என்பதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அல்லாஹ் தனது வேதத்தை ஹம்து –லிருந்து ஆரம்பித்தான். ஸுகூர் என்று ஆரம்பிக்கவில்லை; மதஹ் என்று ஆரம்பிக்கவுமில்லை. ஏனெனில் ஹம்து என்ற சொல் மேற்கண்ட இரு பொருள்களையும்

உள்ளடக்கியுள்ளன. அதுவன்றி சீர்திருத்தம் என்ற பொருளும் உண்டு. நாம் அல்லாஹ்வுக்கு ஹம்து செய்யும் போது வெறுமனே நன்றி செலுத்துவது மட்டுமின்றி, ஓர் ஒப்புதல் வாக்குமூலமும் ஆகும். இறைவன் எனக்கு தனது அருளால் இதனை தந்தான். மேலும் நமது முயற்சி, உழைப்பு எந்த அளவுக்கு இருந்ததோ அதன் மீது அருள்புரிந்து அதனை ஏற்றுக் கொண்டு அதற்கு பலனை வழங்கினான்.

மேலும் அதுவன்றி நாம் செய்த உழைப்புக்கும் துஆவுக்கும் உரிய கூலியை மட்டும் இறைவன் வழங்கினான் என்பதன்று. மாறாக, எமது முயற்சிகளிலுள்ள குறைபாடுகள், துஆக்களில் உள்ள குறைபாடுகள் இவற்றை சீர்படுத்தியவாறு அதற்கு மிகச் சிறந்த அழகிய விளைவுகளை வழங்கினான். எனவே அல்லாஹ்வுக்கு நன்றி சொல்லுதல் என்பது சாதாரண நன்றி செலுத்துதல் அல்ல. மாறாக, நமது குறைகளை திரையிட்டான். அதுமட்டுமின்றி, நமது குறைகளை அவனே சீர்திருத்தி நமது தகுதியை உயர்த்தினான். இவையெல்லாம் அல்லாஹ் வழங்கியவையாகும். மனித முயற்சியின் விளைவல்ல. எனவே நாம் சிந்தித்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவோம் எனில் பிறகு அல்லாஹ் தனது அடியாருக்கு நற்செய்தி தருகிறான். நீங்கள் எமக்கு நன்றி செலுத்தி நல்ல விளைவையும் பெற்றுள்ளீர்கள். உங்கள் சிந்தனைகளை நல்ல முறையில் திருப்பி நான் தான் உங்களுக்கு இதனை வழங்கியுள்ளேன் என்பதை புரிந்தீர்கள். அல்லாஹ்வுடைய வல்லமை, ஆற்றல் மற்றும் எல்லா பண்புகளையும் புரிய வைக்கக் கூடியதாகும். இதனை எப்போதும் புரிய வேண்டியது அவசியமாகும்.

பிறகு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி ஹம்து செய்த பிறகு மற்றவர்களுக்கு நன்றி செலுத்துவதற்கும் கவனமூட்டியுள்ளான். இந்த நன்றியுடைமை அடியார்களின் உரிமையாகும். ஒவ்வொரு மனிதரும் நமக்கு ஏதாவது சிறு உதவிகள் செய்திருந்தாலும் நமக்கு அதற்கு நன்றி செலுத்த வேண்டும். இதுவே இபாதுர் ரஹ்மான் – ரஹ்மானின் அடியார்களின் பண்பாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அடியார்களின் கடமையை நிறைவேற்றாமல் அல்லாஹ்வுக்குரிய கடமையையும் நிறைவேற்ற முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நன்றி, கருணையை வெளிப்படுத்துவதில் மிக உயரிய நிலையை அடைந்திருந்தார்கள். அவ்விடத்தை எவரும் சென்றடைய முடியாது. அன்னார் கூறுகின்றார்கள்: எவர் மனிதனுக்கு நன்றி செலுத்துவதில்லையோ அவர் அல்லாஹ்வுக்கும் நன்றி செலுத்த முடியாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒருவர் மிகச் சாதாரணமான சேவை செய்தாலும் அதற்கு அன்னார் மிகப்பெரும் நன்றியை செலுத்துவார்கள். இது அவர்களுடைய நன்றியுடைமையின் வெளிப்பாடாகும். மக்கா வெற்றிக்குப் பிறகு மதீனாவிலேயே தங்க முடிவு செய்ததும் இந்த நன்றியுடைமையின் காரணத்தினால்தான். அன்றாட வாழ்க்கையிலும் கூட அன்னாரின் நன்றியுடைமையை வெளிப்படுத்தும் ஏராளமான சம்பவங்கள் உள்ளன. அவர்கள் இந்த நன்றியுடையின் உணர்வில் கருணை காட்டிய சம்பவங்கள் உள்ளன. இந்த நன்றியுடைமையின் வெளிப்பாடு கூட அன்னாரின் மகத்தான முன்மாதிரியின் ஒரு வகையாகும். எனவே ஒரு உண்மையான முஃமின் இதனைப் பின்பற்றுவது அவசியமாகும். எப்போதும் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் அருளால் ஜல்ஸாவின் எல்லா பணிகளும் மிக நல்ல முறையில் முடிவுக்கு வந்தது. அதற்காக நாம் முதலில் இறைவனுக்கு நன்றி செலுத்துவோம். அதே வேளையில் இரவும் பகலையும் ஒன்றாக்கி பணி செய்த சேவகர்கள் – தொண்டவர்களுக்கும் நன்றி கூறுகிறோம். ஜல்ஸாவுக்கு முன்பே இவர்கள் ஒரு நாளைக்கு பல மணி நேரங்கள் இங்கு வகாரே அமல் செய்துள்ளனர். ஹதீகத்துல் மஹ்தியில் ஒரு தற்காலிக நகரத்தையே உருவாக்கினார்கள். இன்று வரை வகாரே அமல் நடந்து கொண்டுதான் இருக்கிறது. எல்லாவற்றையும் அங்கிருந்து அகற்றுவது, சுத்தம் செய்வது போன்ற பணிகள் உள்ளன. மார்க்கி போன்றவற்றை அமைத்துத் தந்த கம்பெனிகள் தாமே திரும்ப கழற்றி எடுத்துக் கொண்டு விடுவர் என்றபோதிலும் இன்னும் நிறைய பணிகள் உள்ளன. இப்போது வரை நடந்து கொண்டிருக்கின்றன. எவ்வாறிருப்பினும் இம்மக்கள் நன்றி செலுத்துவதற்கு தகுந்தவர்கள் ஆவர். ஜல்ஸாவில் கலந்து கொள்ள வந்த விருந்தினர்கள் பல்வேறு பிரிவின் தொண்டர்களுக்கும் நன்றி செலுத்த வேண்டியுள்ளது. பல்வேறு நாடுகளில் இருந்து வந்த ஜமாஅத் அல்லாத விருந்தினர்கள் என்னிடம் பிரத்யேகமாக நன்றி

கூறிவிட்டுச் சென்றனர். உணவு, தங்குமிடம் ஆகிய விஷயங்களில் இவர்கள் மீது அளவுகடந்த கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இந்த பணிகளில் நியமனம் செய்யப்பட்ட அனைவரும் எந்த விதிவிலக்கும் இன்றி நற்பணியாற்றியுள்ளனர். எப்போதும் போன்று அம்மக்களின் பணிகள் எம்மை கவர்ந்தன. பல்வேறு தொழில்கள் சம்பந்தப்பட்ட மக்கள் எப்படி மனமகிழ்ச்சியுடன் சாதாரண பணிகளைக் கூட செய்கின்றனர்? என்று கூறினர்.

இவ்வருடம் ஜல்ஸாவில் மகிழ்ச்சிக்குரிய அம்சம் என்னவெனில் சிலர் குறை கண்டுபிடிப்பதில் புலமைபெற்றிருக்கின்றனர். ஒவ்வொரு பணியிலும் நல்லவற்றை அவர்களால் காண முடியாது. குறைசொல்லும் பழக்கம் அவர்களுக்கு இருக்கிறது. அதுவும் நல்லதுதான். அவர்களால்தான் பணிகளை சிறப்பாக செய்ய முடிகிறது. நான் அவர்களது இந்த ஆட்சேபனைகளை குறை கூறவில்லை. இதனால் நன்றாக செய்வதற்கு ஓர் வழிதான் ஏற்படுகிறது. பழக்கம் என்ற சொல்லை பயன்படுத்தக் காரணம் சிலர் தமது பழக்கத்தால் குறை சொல்கின்றனர். இந்த (ஆட்சேபனை என்ற) துரும்புகளை தூக்கி எறியும் போது சரி செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. இதுவும் அமைப்புக்கு பயன் தருகின்ற ஒரு செயல் ஆகும். நான் கூற வந்தது இவ்வருடம் குறைகளை சுட்டிக் காட்டிய பிறகும் கூட அக்கடிதங்களில், எல்லா பிரிவுப் பணிகளில் சாத்தியமான அளவு சிறப்பாக செய்ய முயன்றிருப்பது தெரிய வந்துள்ளது என்று எழுதப்பட்டிருந்தது. மக்கள் அங்கிங்கு நடமாடுகிறார்கள். நேரத்தை வீணாக்குகிறார்கள் என்று குறை கூறுபவர்கள் கூட மக்கள் ஜல்ஸாவில் ஆர்வமாக அமர்ந்து கேட்டதைப் பார்க்கிறோம் என்று எழுதியுள்ளார்கள்.

அதேபோன்று இபாதத், துஆ, திக்ரே இலாஹி ஆகியவற்றிலும் கவனம் இருந்ததைப் பார்த்தோம். ஜல்ஸாவில் கலந்து கொண்டவர்கள் இந்த அடிப்படையில் நன்றிக்கு கடமைப்பட்டவர்கள் ஆவர். அவர்கள் இந்த ஜல்ஸாவிற்காக வந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முயன்றுள்ளனர். நான் ஏற்கனவே கூறியது போன்று இதைத்தான் செய்ய வேண்டும்; செய்தனர். இந்த மக்களிடம் காணப்பட்ட இந்த மாற்றத்தை அல்லாஹ் நிரந்தரமாக்குவானாக. பிறகு உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பல்வேறு நாடுகளில் வசித்த அஹ்மதிகள் மிகவும் கவனமாக ஜல்ஸாவைப் பார்த்தனர்; கேட்டனர். அஹ்மதிகள் குறிப்பாக U.K.ஜல்ஸா மற்றும் ஜெர்மனி ஜல்ஸாவை மிகவும் எதிர்பார்ப்புடன் பார்க்கின்றனர். இந்த ஜல்ஸாவை கேட்பதும் பார்ப்பதும் M.T.A. மூலம் மிகவும் எளிதாகி உள்ளது. பாகிஸ்தானில் ஜல்ஸா நடக்காததால் இழப்பின் உணர்வு மிகவும் அதிகமாக இருந்தது. M.T.A. மூலமாக முழு உலகமும் ஜல்ஸா நிகழ்ச்சிகளை காண்கின்றது; கேட்கின்றது. இந்த வகையில் M.T.A.வுக்கு நன்றி தெரிவித்தும் ஏராளமான கடிதங்கள் வருகின்றன. M.T.A.ஊழியர் கூறுகிறார்கள். எவ்வளவு பெரும் எண்ணிக்கையில் கடிதங்கள் வந்துள்ளன என்றால் அத்தனைக்கும் பதில் எழுதுவது சாத்தியமேயில்லை. M.T.A. -ன் ஊழியர்களுக்கு அம்மக்கள் அக்கடிதத்தின் மூலம் நன்றி செலுத்தியுள்ளனர். M.T.A.வுக்கு நேரடியாக எழுதுவதுடன் எனக்கும் நிறைய பேர் வாழ்த்திக் கடிதம் அனுப்புகின்றனர். அவற்றில் M.T.A.ஊழியர்களைக் குறிப்பிட்டு எழுதியுள்ளனர். அவர்களுக்கு எமது சலாத்தையும் நன்றியையும் தெரிவித்து விடுங்கள் என்று கூறியுள்ளனர்.

மாஷா அல்லாஹ். M.T.A. ஊழியர்களாக பணியாற்றுபவர்களுள் பெரும்பாலார் தன்னார்வத் தொண்டர்கள் ஆவர். வருடக்கணக்கில் நிரந்தரமான தரத்துடன் அவர்கள் பணியாற்றுகின்றனர். அனைவரும் நன்றி செலுத்துவதற்கு உரியவர்கள் ஆவர். நான் ஜமாஅத் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றி கூறிக் கொள்கிறேன். இங்கு M.T.A. இன்டர்நேஷனல் U.K. -ல் பணியாற்றக் கூடியவர்கள் தவிர உலகின் பல நாடுகளில் M.T.A. -வில் தன்னார்வத் தொண்டர்கள்தான் பணியாற்றுகின்றனர். அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன். அதுவன்றி ஜமாஅத் இணையதளமான alislam.org ம் ஜல்ஸாவை காண்பிப்பதில் முக்கிய பங்காற்றி உள்ளது. இதிலும் எண்ணற்ற தன்னார்வத் தொண்டர்கள் வேலை செய்கின்றார்கள். பல மணி நேரங்கள் இதற்காக நேரத்தை வழங்குகின்றனர். அமெரிக்காவிலிருந்து இதற்கான வேலை நடக்கிறது. டாக்டர் நயீம் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் இதற்கு இன்சார்ஜ் ஆக இருக்கிறார்கள். அன்னார் கூறினார்கள். இவ்வருடம் இதனை எவ்வளவு அதிகமான மக்கள் பயன்படுத்தினார்கள் எனில் அது விட்டு விட்டு நிகழ்ச்சிகள் தெரிந்தன என்ற புகாரும் வந்தது. எவ்வாறிருப்பினும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் மக்கள் பார்ப்பதற்காக செய்யப்பட்டது என்றாலும் அதிகமான எண்ணிக்கையில் மக்கள் அதனை கண்டுள்ளனர். alislam.org -ன்

குழு இதனை இன்னும் சிறப்பாக செய்வதற்கும் மக்களை பயன்படுத்தச் செய்வதற்கும் என்ன செய்யலாம் என்று ஆய்வு செய்ய வேண்டும்.

இவ்வருடன் பாதுகாப்பு விஷயத்தில் சில கவலைகள் இருந்தன. இறைவன் தனது அருளால் அதனை அகற்றினான். இது வெறும் கவலை மட்டுமல்ல. பாகிஸ்தான் சம்பவத்தால் ஏற்பட்ட பயம் அன்று. மாறாக உண்மையான கவலை இருந்தது. ஒரு சம்பவம் நடந்தது. அதன் சாத்தியக் கூறுகள் அவர்களின் நிய்யத் தவறாக இருந்திருக்கும் என்று தெரிவிக்கின்றன. பாதுகாப்பு செய்பவர்கள் சுதாரிப்பு மற்றும் சிறப்பான ஏற்பாடுகள் மூலமாக அல்லாஹ்வின் அருளால் ஜல்ஸா பாதுகாப்பாக நடந்து முடிந்தது. எனவே எல்லா பாதுகாப்பு பணி செய்பவர்களும் இவ்வருடம் பல்வேறு பகுதிகளாக பிரித்து விரிவான முறையில் நியமிக்கப்பட்டிருந்தனர். இம்மக்கள் ஒரு நாளைக்கு 1-2 மணி நேரங்கள் தான் உறங்கியிருப்பார்கள். மீதி நேரங்கள் முழுவதும் டியூட்டியில் இருந்தார்கள். பாதுகாப்பு மற்றும் படைப்பின் சேவை போன்றவற்றின் பணிகள் சிறப்பாக இருந்தன. எனினும் சில சம்பவங்கள் நடந்துள்ளன. சேவகர்களில் புரிதலில் ஏற்பட்ட தவறினால் சிலர் மனக்கஷ்டத்திற்கு ஆளாகி உள்ளனர். நான் கூறியதுபோன்று அது புரிவதில் ஏற்பட்ட தவறுதான். இதனால் ஒன்றிரண்டு குடும்பத்திற்கு கஷ்டம் ஏற்பட்டுள்ளது. அவர்களிடம் மன்னிப்பு கேட்கிறோம். ஆனால் எந்த ஒரு Pressure -ன் கீழ் அந்த தொண்டர்கள் பணியாற்றி உள்ளனர் எனில் அவர்களுக்கு ஓய்வே கிடைக்கவில்லை. இந்நிலையில்தான் இதுபோன்ற சம்பவங்கள் நடந்து விடுகின்றன. எனவே யாருக்கு அந்த தொண்டர்களால் கஷ்டம் ஏற்பட்டதோ அவர்கள் இதனை மன்னித்து விடுங்கள். இதனால் உள்ளத்தில் எந்த வருத்தமும் கொள்ள வேண்டாம். பொதுவாக இந்த டியூட்டி செய்பவர்கள் அசாதாரணமான விழிப்புடன் இருந்துள்ளனர். மிகவும் கூர்ந்து கவனித்து வேலை செய்துள்ளனர். எனது எதிர்பார்ப்புக்கும் மேலாக பொறுப்புணர்வை நிரூபித்துக் காட்டினர். டியூட்டி தருகின்ற குத்தாம்கள் ஜல்ஸாவின் சில நாட்களுக்கு மட்டும் டியூட்டி கொடுப்பவர்கள் அல்ல. நிரந்தரமாக டியூட்டி கொடுப்பவர்கள் கடந்த 26 வருடமாக டியூட்டி கொடுத்து வருகிறார்கள். இந்த அடிப்படையில் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். குறிப்பாக மஸ்ஜித் ஃபஸ்ல் பள்ளியில் நிரந்தரமாக ஓர் உணர்வுடன் 24 மணி நேரமும் டியூட்டி கொடுப்பவர்கள் தமது பணிகளையும் சுருக்கி விட்டு நேரத்தை வழங்குகின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலி வழங்குவானாக. இம்முறை பாதுகாப்பு ஏற்பாடு சம்பந்தமாக பொறுப்புணர்வின் வியத்தகு காட்சிகள் காணக் கிடைத்தன. ஒரு லஜ்னாவின் பொறுப்பாளர் எழுதுகிறார்: தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து மார்க்கியின் பக்கம் சென்றார். இடையில் நுழைந்து சென்றார். வெளியே வந்து வாசல் வழியாக போகவில்லை. எனவே Checking பற்றி நினைவில்லை. ஆனால் அங்கிருந்து வெளியேறும் போது ஒரு பணியாளர் உங்கள் பேக் – ஐ பரிசோதனைக்கு தாருங்கள் என்றார். அப்பெண் மிகவும் விளக்கிக் கூறினார். நானும் டியூட்டியில் உள்ள பெண்தான். அதற்கான பேட்ஜும் அணிந்துள்ளேன். வெளியே போகவேயில்லை. உள்ளிருந்து வந்து செல்கிறேன். பிறகு கூட பணியாளர், உள்ளே போக முடியாது என்றார். உடனே அப்பெண் இப்படி Check செய்ய வேண்டும் என்று உங்களுக்கு யார் சொன்னது? தனிப்பட்ட முறையில் வழிகாட்டல்கள் அதிகாரிகளுக்கு வழங்குவதுண்டு என்று நினைத்த வேளையில் அப்பணியாளர் சாதாரணமாக கூறினார். குத்பாவில் ஹுஸுர் கூறியுள்ளார்கள். எனக்கு அது போதுமானது. வேறு அதிகாரிகள் சொன்னாலும் சரி, சொல்லா விட்டாலும் சரி உங்களை Check செய்யாமல் போகவிடமாட்டேன்.

இதுவே டியூட்டி செய்பவர்களிடம் காணப்பட்ட உணர்வு. இதனை கூறும் போது எனக்கு காதியானில் நடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் அஹ்ராரிகளின் விஷமம் காதியானில் அதிகமாக இருந்தது. அவர்களால் கணிசமான ஆபத்து இருந்தது. எனவே பெஹஷ்தி மக்பராவில் டியூட்டிக்கு ஹுஸுர் ஏற்பாடு செய்தார்கள். ஒவ்வொருவருக்கும் ஹுஸுர் ஒரு Code word (சங்கேத வார்த்தையைக்) கூறியிருந்தார்கள். அதனைக் கூறினால் மட்டுமே உள்ளே விட வேண்டும். பணிகளை பரிசோதிப்பதற்காக ஒரு முறை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இரவில் தானே சென்றார்கள். காவலர்கள் தடுத்தார்கள். ஹுஸுர் தனது பெயரைச் சொன்னார்கள். காவலர்கள் கூறினர். ஹுஸுர் நான் உங்களை தெரிந்து கொண்டேன். ஆனால் உங்கள் கட்டளை Code இல்லாமல் யாரும் உள்ளே செல்லக் கூடாது என்பதுதான். எனவே தாங்களும் போக முடியாது. ஹஸ்ரத்

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அதனை மிகவும் பாராட்டினார்கள். காலத்தின் கலீஃபாவின் கட்டளையை வைத்து ஒருவர் காலத்தின் கலீஃபாவை தடுத்து நிறுத்த முடியும் என்றால் மற்ற பொறுப்பாளர்களை நிறுத்துவது பெரிய விஷயமல்ல.

சில புதிய ஏற்பாடுகளும் உள்ளன. அதனை சரியாக கணிக்க முடியாது. குறைகளும் ஏற்படலாம். இவ்வருஷம் ஜல்ஸாவின் நுழைவாயிலின் Scanner –கள் குறைவாக இருந்தன. குறிப்பாக பெண்கள் நீண்ட நேரம் காத்து நிற்க வேண்டியதாயிற்று. அதனை சென்ற குத்பாவில் நான் கூறினேன்.

சில டியூட்டி செய்த பெண்கள் எனக்கு எழுதியுள்ளார்கள். கூட்டத்தின் காரணமாக பெண்கள், சிறுவர்கள் 2-2.30 மணி நேரங்கள் நிற்க வேண்டியதாயிற்று. நிழலும் இல்லாததால் வெயிலில் நிற்க வேண்டியது வந்தது. மக்கள் மிகவும் பொறுமையாக அதிக நேரம் நின்றார்கள். கொஞ்சம் கூட பொறுமையின்மை மற்றும் கோபத்தைக் காட்டவில்லை. குழந்தைகளும் கஷ்டப்பட்டனர்.

ஒரு தொண்டர் எழுதுகிறார்: குழந்தைகள் பெண்களின் நிலைமைகளைப் பார்த்து எனக்கு அழுகை வந்தது. இவர்கள் ஜல்ஸாவுக்கு வந்ததால் இந்த பொறுமையைக் காட்டுகின்றனர். இங்கு வந்தது மார்க்க நோக்கத்திற்காகவாகும். இன்னும் சில பெண் தொண்டர்கள் வரிசையில் நிற்கும் பெண்களைப் பார்த்து அழுதும் விட்டனர். இருந்தும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தமது கடமையை நிறைவேற்றியே ஆக வேண்டும். பிறகு அமைப்புக்கு கவனத்திற்கு கொண்டு வந்து பிறகு இரண்டாம் நாள் அப்படி நடக்கவில்லை. ஜுமுஆ வேளையில் தான் இந்த கஷ்டம் இருந்தது.

சிறு குழந்தைகளின் பெற்றோரிடம் ஜமாஅத் அமைப்பு இதற்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறது. அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது. இந்த சம்பவம் மூலம் அஹ்மதி பெண்களின் பொறுமை வெளிப்பட்டுள்ளது. இன்று வரை எங்களுடைய பொறுமை உள்ளது என்று காட்டியுள்ளனர். கொஞ்சமாவது அவர்கள் பொறுமையின்மை காட்டியிருந்தால் ஜமாஅத் அமைப்பு நிலைகுலைந்து விடும். நுழைவாயிலில் உள்ள இந்த ஏற்பாடு நிச்சயமாக கலந்து கொள்பவர்களுக்கு ஆதரவாக உள்ளதேயாகும். பிறகு மீண்டும் இறைவனது ஹம்து –ன் கருத்து தொடர்கிறது. அல்லாஹ்வே உள்ளங்களில் ஜமாஅத்திற்கு தியாகம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை நிலைநாட்டியுள்ளான்.

ஜமாஅத்திற்கு வெளியில் உள்ளவர்களும் இதனை கவனித்துள்ளனர். இதுபோன்று மற்ற பிரிவுகளில் நல்ல விளைவு தென்பட்டது. போக்குவரத்து பிரிவு, இது சென்ற வருடமும் நன்றாகவே செயல்பட்டது. இவ்வருடம் முன்னரை விட சிறப்பாக இருந்தது. மேலும் உணவு சமைத்தல் விநியோகம் செய்தல் பிரிவும் நன்றாக இருந்தது. இன்னும் மற்ற பிரிவுகளும் மிகச் சிறப்பாக இருந்தன. அல்லாஹ் இவர்களின் ஈமானையும் தூய்மையையும் அதிகரிப்பானாக.

காவல்துறையும் நமது ஜமாஅத் அமைப்பிடம் இதைத்தான் கூறியுள்ளது. எல்லா நிகழ்ச்சிகளும் அசாதாரண அமைதியுடன் நிறைவடைந்துள்ளது. இது எமக்கும் கூட சிறந்த முன்னுதாரணமாக இருந்தது.

அரசின் Health and Safety அமைப்பு சென்ற வருடம் விதிமுறைகளுக்கேற்ப சில கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. இவ்வருடம் அந்த அமைப்பு கூறியுள்ளது. உங்களது பணிகள் முன்னுதாரணமாக இருந்தன. இவ்வருடம் எமது அறிக்கை அச்சிடும்போது இதனை நாங்கள் மற்றவர்களுக்கும் எடுத்து வைப்போம்.

அல்லாஹ்வின் அருளாகும் இது. மற்றபடி நமது முயற்சி ஒன்றுமல்ல. பல்வேறு பிரிவு மக்களின் கவனத்தை அவனே நம் பக்கம் திருப்பியுள்ளான். நமக்கு அல்லாஹ்வே எப்போதும்போல் உதவி செய்தான். எனவே நாம் அவனுக்கே ஹம்து செய்கிறோம். அவனே நமது பணிகளில் உள்ள குறைகளை மறைக்கிறான். நல்ல விளைவை ஏற்படுத்துகிறான். எதிரிகளின் திட்டங்களை மண்ணோடு மண்ணாக்குகிறான். நாம் அல்லாஹ்வுக்கு நன்றி கூறுகிறோம். அவனே தனது சிறப்பான கரம் நீட்டி நமக்கு உதவி செய்தவாறு எல்லா பிரிவின் தொண்டர்களுக்கும் அவர்தம் கடமையை நிறைவேற்ற வாய்ப்பளித்தான்.

நான் ஏற்கனவே கூறியது போன்று ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்கள் மற்றும் M.T.A மூலம் பார்ப்பவர்கள் அனைவரும் இறைவனது அருள்மழை இறங்கக் கண்டனர். அதனை கடிதங்களில்

வெளிப்படுத்தியுள்ளனர். அல்லாஹ் தனது அருளை நம்மீது இறக்கிக் கொண்டே செல்வானாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மீது கொண்ட எதிர்பார்ப்பை முழுமையாக நிறைவேற்ற வாய்ப்பளிப்பானாக.

அன்னார் கூறுகிறார்கள்: என்னென்ன மாற்றங்கள், நம்மீது ஏற்பட்டுள்ளனவோ அது மற்றவர்கள் மீது ஏற்படவில்லை.

எனவே முன்னேற்றத்தின் பக்கம் நாம் காலடி வைக்க வேண்டியவர்கள் இன்ஷா அல்லாஹ். அல்லாஹ்வுக்கு உண்மையான ஹம்து செய்பவர்கள் ஆக வேண்டும். அதன் மூலம் அல்லாஹ்வின் அருள் முன்னரை விட அதிகமாக நம் மீது இறங்கிக் கொண்டே செல்லட்டுமாக. அல்லாஹ் அதற்கு வாய்ப்பளிப்பானாக.

இன்று ஒரு துயரச் செய்தி ஒன்றும் உள்ளது. முகர்ரம் முஸ்தஃபா ஸாபித் சாஹிப் நமது மிஸ்ரி (எகிப்து) அஹ்மதி. அன்னார் நேற்று மரணித்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவரது ஜனாஸா தொழுகை இன்ஷா அல்லாஹ் திங்கள் கிழமை நடைபெறும். அவரது சில சிறப்புகளை இப்போது எடுத்து வைக்கிறேன்.

இவர் 1936 -ல் மிஸ்ரில் பிறந்தார். இவரது வயது 74. அல்லாஹ்வின் அருளால் இவர் வஸிய்யத் செய்தவர். 1971 -லிருந்து இவர் கனடாவில் இருந்தார். சிறு வயதிலேயே பைஅத் செய்து விட்டார். இவர் பைஅத் செய்த விபரம் மிகவும் நீளமானது.

அல் ஃபஸ்ல் -ல் அரபிகளை அறிமுகம் செய்து வைக்கக்கூடிய தாஹிர் நாஸிம் சாஹிப் இவரைப் பற்றி எழுதுகிறார்கள். இவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர். முதல் மனைவி மரணித்ததால் இரண்டாவது திருமணம் செய்தார். பல்வேறு பணிகளை செய்தார். ஜமாஅத் பொறுப்புகளைத் தவிர கனடாவில் நேஷனல் தப்லீக் செயலராக இருந்தார். 1985 -ல் Chairman of National Committee ஆக இருந்தார். ஜமாஅத் பொறுப்புகளில் சிறப்பான வேகம் உள்ளவர். M.T.A.விற்காக பல நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார். அது வெளியாகியும் உள்ளது. பொருளாதார தியாகத்தில் எப்போதும் முன்னணியில் நிற்பவர். பெரும் பெரும் தொகைகளை ஜமாஅத்திற்கு வழங்கியுள்ளார். இவரைப் பற்றி ஒருமுறை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள். இம்மனிதர் வழங்கிய சந்தாவை நான் கணக்கிட்ட போது தனது வருமானத்தின் 70 சதவீதத்தை ஜமாஅத்திற்காக செலவழித்துள்ளார். ஜமாஅத்திற்காக பெரும் பொருள் தியாகம் செய்தவர். அச்சகம் வைப்பதற்காக செலவு செய்துள்ளார். பல நூல்களை எழுதியுள்ளார். தப்லீகிற்காகவும் நிறைய செலவு செய்துள்ளார். அரபி நூல்களான மாக்மதுல் குப்ர், அஜா அனில் இஸ்லாம், அல் இஸ்லாமுதீனுல் கய்யூம், அஸ்ஸீரத்துல் முதஹ்ஹரா, தலாயில் ஸித்குல் அன்பியா போன்ற நூல்களை எழுதியுள்ளார். மேலும் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபின் நூலான முதல் கலீஃபத்துல் மஸீஹ் மற்றும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் எழுதிய Revelation Rationality Knowledge and Truth என்ற நூலையும் மொழிபெயர்த்துள்ளார். Five Volume Commentary -ன் முதல் Volume ஐ மொழிபெயர்த்தார். ஒரு நூலை 2003-ல் எழுதிக் கொண்டிருக்கும் போதே நோயுற்றிருந்தது எனக்கு நினைவிருக்கிறது. பிறகு அதனை வெளியிடவும் செய்தார். அடுத்து திருக்குர்ஆன் முன்னுரை என்ற நூலையும் மொழிபெயர்த்தார். அதில் இவருடன் இன்னொருவரும் உண்டு. ஜல்ஸாக்களில் நல்ல சொற்பொழிவுகளைத் தருபவர். ஒவ்வொரு திட்டத்திலும் நல்ல முறையில் பங்கு பெறுவார். நான் இவரை முதலில் 1986 -ல் பார்த்தேன். அநேகமாக அப்போதுதான் கானா போயிருந்தேன். நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் கூறியதற்கிணங்க, சில அஹ்மதியல்லாதவர்கள் அரபி முஸ்லிம்கள் அஹ்மதியாக மாட்டார்கள் என்று கருதுகிறார்கள். அப்போது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் அவரை அரபு மக்களிடம் சென்று தப்லீக் செய்யுமாறு கூறினார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் 1984 -ல் ஹிஜ்ரத் வந்த போது இவரும் இங்கு வந்தார். சிறிது சோதனைக்கு உள்ளானார். பிறகும் கூட உறுதியாக நின்றார். பிறகு இறைவன் இவருக்கு பெரும் கூலி வழங்கினான். அவர் மிகவும் நோயுற்றிருந்தார். அப்போதும் கூட இறுதி காலத்தை உங்கள் அருகில் கழிக்க விரும்புகிறேன். அங்கு வருகிறேன் என்று கூறினார். இங்கு

வந்தார். கணிசமாக நோயுற்றிருந்ததால் Guest House –ல் நானே அவரை சந்திக்க விரும்பினேன். நான் அவரைப் பார்க்க வருகிறேன் என்று தெரிந்ததும் அவர் விரைவாக தனது அறையை விட்டு வெளிப்பட்டு எனது ஆபிஸுக்கு வந்து விட்டார். நான்தான் உங்களைப் பார்க்க வரவிருந்தேனே? என்று கேட்ட போது அது முடியாது. நான் தான் தங்களை காண வருவேன். நான் இங்கு வந்துள்ளேன். நான் தான்உங்களை வந்து சந்திக்க வேண்டும் என்றார். இங்கு தான் இருந்தார். சில நாள் முன்பு கடும் நோயுற்றதால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நோய் அதிகமாகியது. உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. அரபி நிகழ்ச்சிகளில் நல்ல பங்கு வகித்தார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அடிமையாக இருந்த ஹக்கை நிறைவேற்றினார். சிலுவையை முறிக்கும் பணியை நன்றாக செய்தார். மிகவும் ஆழமான இல்ம் இருந்தது. எனவே கிறித்தவர்களும் அவரை மதித்தனர். அவருக்கு கேன்சர் நோய் இருந்தது. பெரும் பொறுமையுடன் நோயை சகித்து வந்தார். கடைசி நேரம் வரை சேவையும் செய்தார். தனது சகோதரர்களுக்கு நோயின் கடுமையை காட்டிக் கொள்ளவில்லை.

அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. திங்கள் கிழமை அநேகமாக இவரது ஜனாஸா தொழுகை நடைபெறும். இவரது ஒரு மகனும், மகளும் வர வேண்டியதுள்ளது.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA

HADHRAT KHALIFATUL MASIH V

AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 06.08.2010

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**